

திருவெறும்பூர் தொகுதி திருச்சி மாநகராட்சி மண்டலம் மூன்று வார்டு எண் 44 உட்பட்ட பகுதி மக்களுக்கு ஏ ஆர் என் திருமண மண்டபம் மேல கல்கண்டார் கோட்டை பகுதியிலும் நடந்த 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்களை தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார். , இதில் கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் உள்ளனர்.



கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கோவை மாநகர் மாவட்டப் பொறுப்பாளராக நியமனம் செய்யப்பட்ட துரை.செந்தமிழ்ச் செல்வன் ஏற்பாட்டில் கோவை மாநகர் மாவட்ட தி.மு.கழகத்தின் சார்பில் கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி. செந்தில் பாலாஜி தலைமையில் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதில் மாவட்டச் செயலாளர்கள் தொண்டாமுத்தூர் அ.ரவி (கோவை வடக்கு), தளபதி முருகேசன் (கோவை தெற்கு), கோவை நாடாளுமன்ற உறுப்பினர், முனைவர் கணபதி ப.ராஜ்குமார், கழக சொத்துப் பாதுகாப்புக்குழு துணைத் தலைவர், முன்னாள் அமைச்சர் பொங்கலூர் நா.பழனிச்சாமி உள்பட மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், கோவை மாநகராட்சி மேயர், துணை மேயர் பகுதி கழக பொறுப்பாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள், மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், நிலைக்குழு தலைவர்கள், பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணை தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் பலர் கலந்து கொண்டனர்.

### கரூர் த.வெ.க. கூட்டத்தில் காயமடைந்த

# 45 பேரின் வீடுகளுக்குச் சென்று நிதி உதவி!

## வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. வழங்கினார்!

*கரூர், அக். 9 -*

*கரூர் த.வெ.க. கூட்டத்தில் காயம் அடைந்த 45 நபர்களின் வீடுகளுக்கு நேரில் சென்று முதலமைச்சரின் பொது நிவாரண நிதியை கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி, கரூர் மாவட்ட கலெக்டருடன் சென்று வழங்கினார்.*

*கரூர் வேலுச்சாமிபுரம் விஜய் கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் மயக்கம் அடைந்து 41 பேர் இறந்தனர். இந்த சம்பவத்தை அடுத்து யாருக்கும் ஆறுதல் கூற விஜய் வரவில்லை. அறிவித்த நிவாரண உதவி தொகையையும் வழங்கவில்லை. அடுத்த கட்ட தலைவர்கள் கைதுக்கு பயந்து தலைமறைவாகி விட்டனர்.*



*இந்த சம்பவத்தில் 41 பேர் உயிரிழந்துள்ளனர். 110 பேர் காயம் அடைந்தனர். உயிரிழந்தவர்கள் குடும்பத்திற்கு தலா ரூ. 10 லட்சம், காயமடைந்த குடும்பத்திற்கு தலா ரூ.1 லட்சமும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் பேரில் வழங்கப்பட்டு வருகிறது. சம்பவம் நடந்தவுடன் இதை கேள்விப்பட்டு உடனடியாக கரூர் அரசு மருத்துவமனைக்கு வந்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறிய பின்னர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இதனை அறிவித்தார்கள்.*

*கரூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட காமராஜபுரம், எல்ஜிபி நகர், அண்ணாநகர், உழவர் சந்தை, ராயனூர் முகாம், சுக்கா லியூர், கோடங்கிபட்டி, காளியப்பனூர், தாந்தோணிமலை, அம்மன் நகர், கொளந்தானூர், பசுபதிபாளையம், தெற்கு, கருப்பாயிகோயில் தெரு, ஐந்துரோடு, வஉசி தெரு,வெங்க மேடு, அரசு காலணி, மின்னாம் பள்ளி, திருமுக்கூட லூர், சோமூர், நெரூர் வடக்கு, முனியப்பனூர், குப்பிச்சி பாளையம், ஒடையூர், காதப்பாறை, திட்டச் சாலை, வெங்கமேடு, சிவலிங்கஆசாரியர் தெரு, ஜோதிடர்தெரு, பெரிய குளத்துபாளையம், வேலுச்சாமிபுரம், பெரிய கோதூர், காயத்ரி நகர்,, வடமலை கவுண்டனூர், ஆத்தூர் பிரிவு, ஆண்டாங்கோவில் மேற்கு, ஆண்டாங்கோவில் கிழக்கு, வடிவேல் நகர் ஆகிய பகுதிகளில் நெரிசலில் சிக்கி காயமடைந்து சிகிச்சை பெற்று வீடு திரும்பியவர்களை கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட் டக் கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி நேரில் சந்தித்தார்.*

*45 நபர்களை சந்தித்து நலம் விசாரித்து முதலமைச்சர் பொது நிவாரண நிதியை வழங்கினார்.*

*கரூர் மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல், மாவட்ட வருவாய் அலுவலர் ம.கண்ணன், கரூர் மாநகர செயலாளர் எஸ்பி. கனகராஜ், மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன், பகுதி கழக செயலாளர்கள் க.சுப்பிரமணியன், ஆர்எஸ். ராஜா, ஆர்.ஜோதிபாசு, விஜிஎஸ் குமார், வெங்கமேடு பாண்டியன், மாவட்டத் துணைச் செயலாளர் எம்எஸ்கே.கருணாநிதி, தொழிலாளர் அணி துணைச் செயலாளர் வழக்கறிஞர் விஜயகுமார், ஒன்றிய செயலாளர்கள் முத்துக்குமார், கோயம்பள்ளி பாஸ்கரன், விகே. வேலுசாமி, மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதி கள், கழக நிர்வாகிகள் உடன் சென்றனர்.*



கோவை மாநகராட்சி, வடக்கு மண்டலம், வார்டு எண் 11க்குட்பட்ட சிவானந்தபுரம் மாநகராட்சி ஆரம்பப் பள்ளியில் மாநகராட்சி பொது நிதியின் கீழ் கூட்ட அரங்கு அமைக்கும் பணியினை மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன், கோவை மாநகர் மாவட்ட கழக பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச்செல்வன் ஆகியோர் முன்னிலையில் கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் எம்.பி. துவக்கி வைத்தார்.

### அரியலூர் குன்னம் தொகுதியில்

# முல்லையூர் கிராமத்தில் புதிய பேருந்து!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

அரியலூர், அக். 9 -

அரியலூர் மாவட்டம் குன்னம் சட்டமன்றத் தொகுதி செந்துறை ஒன்றியம் முல்லையூர் ஊராட்சிக்கு, இத்தனை ஆண்டு காலமாக நேரடி பேருந்து வசதி என்பது கிடையாது. முல்லையூர் பொதுமக்கள் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் இப்பகுதிகளில் சென்றமுறை சுற்றுப் பயணம் மேற்கொண்ட போது அவ்வூர் பொதுமக்கள் தங்கள் ஊருக்கு பேருந்து வசதி, சாலை வசதி மேம்பாலம் வசதி உள்ளிட்ட கோரிக்கையை மனுவாக தந்தனர் அதனை ஏற்றுக்கொண்ட அமைச்சர் சா.சி.சிவசங்கர் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார். பின்னர் அதிகாரிளிடம் விசாரணை மேற்கொண்ட போது

முல்லையூர் மக்கள் தங்கள் கிராமத்திலிருந்து அயன் தத்தனூர் அல்லது அருகிலுள்ள தளவாய் கிராமத்திற்கு ஏறக்குறைய 3 கிமீ தூரம் நடந்து சென்று அரியலூர் மற்றும் சுற்று வட்டார பகுதிகளுக்கு செல்லும் நிலை இருந்து வந்ததாக தெரிவித்தனர்.

மக்களின் கோரிக்கையை நிறைவேற்றும் விதமாக அப்பகுதிக்கு சாலை வசதியை ஏற்படுத்தி பொது மக்களின் நீண்ட கால கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் தமிழ்நாடு போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், இன்று முல்லையூர் ஊராட்சிக்கு வருகை தந்து முல்லையூரில் இருந்து அரியலூருக்கு நேரடி பேருந்து வழித்தடத்தை துவங்கி வைத்தார்.

பின்னர் கிராம மக்களை பேருந்தின் அருகில் அழைத்துச் சென்று பேருந்தில் ஏறச் சொன்னார். வரிசையாக பேருந்தில் மக்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் ஏறிக்கொண்டிருந்த போது இளம்பெண் ஒருவர் போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கரின் கையைப்பிடித்து "எங்களின் பலநாள் கனவு சார். ரொம்ப நன்றி" என்றவாறு கைக்குலுக்கி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

பின்னர் பேருந்தின் படிக்கட்டில் ஏறி உள்ளே சென்றவர், மீண்டும் வேகமாக கீழிறிங்கி ஆசையுடன் இரண்டாவது முறையாக படிக்கட்டில் மேலே ஏறியவர் எங்களின் பலநாள் கனவு இது என்றபடி கத்திக் கொண்டே பேருந்தில் அமர்ந்தார்.

மேலும் பேருந்தில் அமர்ந்திருந்த தனது ஊர் மக்களுடன் புகைப்பட மும் எடுத்துக் கொண்டனர். ஒரு சிலர் மகிழ்ச்சியுடன் தங்கள் கையில் இருந்த அலைபேசியில் செல்பி எடுத்து மகிழ்ந்தனர். பின்னர் பேருந்தின் ஓட்டுநர் மற்றும் நடத்துநர் ஆகியோருக்கு கைக்குலுக்கி நன்றி தெரிவித்து மகிழ்ந்தனர்.

எங்கள் தலைமுறையில் இதுவரை எங்கள் ஊருக்கு பேருந்து வந்தது கிடையாது இப்போது மகிழ்வுடன் பேருந்தில் ஏறி பயணம் செய்கிறோம் ஹாப்பி என்று இரு கைகளையும் உயர்த்தி காட்டி மகிழ்ந்தனர்.

மூன்று கிலோமீட்டர் நடந்து சென்று இதுவரை பேருந்து ஏறும் நிலை இருந்தது. தற்போது இந்த ஊருக்கு பேருந்து நிலையம் ரொம்ப சந்தோசம் என கைதட்டி மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

நடத்துனர் பயணிகளுக்கு சாக்லேட்டுகள் வழங்கியதும், பயணிகள் நடத்துனர் மற்றும் ஓட்டுநரை கைப்பிடித்து மகிழ்ச்சியுடன் நன்றி தெரிவித்துக் கொண்ட காட்சிகள் காண்போரை நெகிழ்ச்சியடைய செய்தது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் பொ.இரத்தினசபாபதி, தமிழ்நாடு அரசு போக்குவரத்து மேலாண்மை இயக்குனர்கள், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் வி.எழில்மாறன், பொன்.செல்வம், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே. சி.லூயிகதிரவன் மற்றும் அரசு அலுவலர்கள், ஊர் பொதுமக்கள், கழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.



தருமபுரி மாவட்டம் அரூரில் துணை முதலமைச்சர் உதயநிதி 49 வது பிறந்தநாளை முன்னிட்டு நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோடீஸ்வரன் ஏற்பாட்டில் 1.26 இலட்சம் மதிப்பிலான பரிசுகள் மற்றும் கோப்பைகளை நகர செயலாளர் முல்லை ரவி வழங்கினார். உடன் இளைஞரணி துணை அமைப்பாளர் தங்க செழியன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆரணி கோ. வெற்றிவீரன்

**அக்டோபர் 9 (2019)**



**1954ல் ஆரணி பேரூர்க் கழகம் துவங்கப்பட்டபோது, கழகத்தில் இணைந்து கழகப் பணியாற்ற துவங்கினார்.**

**மாவட்ட பிரதிநிதி, பொதுக்குழு உறுப்பினர், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் என பொறுப்புகள் வகித்தவர்.**

**'நம்நாடு' இதழில் துணை ஆசிரியராக பணியாற்றியதோடு, முரசொலியில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதியவர்.**

**கருப்புக் கொடி போராட்டம், கைலாசம் கமிஷன் எரிப்பு, இந்தி திணிப்பு எதிர்ப்பு, இலங்கைத் தமிழர் ஆதரவு போராட்டம் என தலைமை அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## தத்துவமேதை டி.கே.சீனிவாசன்

## 36வது ஆண்டு நினைவு வணக்கம்

**தோற்றம்**
**14.11.1922**



**மறைவு**
**9.10.1989**

*என்றும் தங்கள் வழி நடக்கும்*

**டி.கே.எஸ்.இளங்கோவன்**, Ex. M.P., (செய்தி தொடர்பு குழு தலைவர், தி.மு.க.) — **நளினி**

**டி.கே.எஸ்.மணிவண்ணன்** — **குணபூஷணி**

**டி.கே.எஸ்.தமிழ்ச்செல்வி** — **எஸ்.தமிழ்மணி**

**திருமதி கீதாலட்சுமி வில்லாளன்**

**திருமதி. மாதவி – ஜான் விஜய்,**

**திருமதி. இ.தரணி – எஸ்.ராகவேந்திரமூர்த்தி,**

**சீனிவாசன், மேகலா, பரிதி ஈசா,**